நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## CC. No.208/2023

## P.W.7 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | மருத்துவர் அருண் நடேஷ் |
| தந்தை / கணவர் பெயர் | : | ராதாகிருஷ்ணன் |
| கிராமம் | : | பி.என்.பட்டி |
| வட்டம் | : | மேட்டூர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW7** |
| வயது | : | 38 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2026–ஆம் வருடம்,ஏப்ரல் மாதம், 08–ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜரில் இல்லை. அவரது வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜரில் இல்லை.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 12.00 P.M.)

1. நான் தற்போது மேட்டூர் அரசு தலைமை மருத்துவமனையில் முதுநிலை உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 11.10.2021–ம் தேதி அன்று பணியில் இருந்த போது மாலை 6.35 மணிக்கு ராமசாமி, த/பெ.சங்கரன், பாலமலை,

கண்ணாமூச்சி என்பவர் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார். அவர் தன்னை அடையாளம் தெரிந்த மூன்று நபர்கள் 10.10.2021–ம் தேதியன்று மாலை 5.30 மணிக்கு கட்டையால் தாக்கியதாக கூறினார்.

2. அவருக்கு ஏற்பட்ட காயங்கள் 1) இடது காலில் 4 X 2 செ.மீ சிராயப்பு காயம் இருந்தது. 2) 6 X 6 செ.மீ வீக்கம் இடது காலில் இருந்தது. இரண்டு காயங்களும் அருகருகே இருந்தது. அவரை பரிசோதித்து முதலுதவி சிகிக்சை வழங்கி உள் நோயாளியாக அனுமதித்தேன். மேற்படி நோயாளி மொத்தம் 11 நாட்கள் சிகிச்சையில் இருந்தார். பல்வேறு துறை சார்ந்த மருத்துவர்கள் அவருக்கு சிகிச்சை அளித்தார்கள். அந்த சிகிச்சை குறிப்புகளை பார்த்தால்தான் அந்த விவரங்கள் எனக்கு தெரியும். **(மேற்படி மருத்துவ சிகிச்சை குறிப்புகள் மற்றும் அது சம்மந்தப்பட்ட ஆவணங்கள் மற்றும் ஊடுகதிர் படங்கள் ஆகியவை இந்த வழக்கில் இதுவரை தாக்கல் செய்யப்படததால் அவற்றை தாக்கல் செய்து சாட்சியம் அளிக்க வேண்டி முதல் விசாரணையின் தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது).**

(விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:– 12.30 P.M.)

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**